**சுருக்கம்**

தொழில் துறை – தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் – சிமெண்ட் உற்பத்தி ஆலை விரிவாக்கம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2)துறை**

அரசாணை (டி) எண்:106 நாள்: 25.07.2014
ஜய, ஆடி 9,
திருவள்ளுவர் ஆண்டு –2045

ஆணை:

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் தொடர்பான கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> "பெருகி வரும் கட்டுமானத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும், கட்டுமானத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் வகையிலும், கட்டுமானத் தொழிலுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுள் ஒன்றான சிமெண்ட் உற்பத்தியை பெருக்கும் வகையிலும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் காகித ஆலையிலிருந்து உருவாகும் சுண்ணாம்புக்கழிவு மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் உலர் சாம்பல் ஆகியவற்றை பயன்படுத்தி நாளொன்றுக்கு 600 டன் சிமெண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்று 30.01.2013 அன்று என்னால் ஏற்கனவே துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை 30 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கப்படும். இதன் மூலம் இந்த சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன்னிலிருந்து 900 மெட்ரிக் டன்னாக உயரும்."

2. மேற்கண்ட திட்டத்தினை தனது சொந்த நிதியிலிருந்தே குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசிற்கு அறிக்கை அனுப்புமாறும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை அரசு பணிக்கிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ச. வி. சங்கர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்
காகித நிறுவனம்,
கிண்டி, சென்னை – 32
நகல்:
தொழில் (வ.செ.தி) துறை, சென்னை– 9
சிறப்புத் திட்டங்கள் மற்றும்
அமலாக்கத் துறை , சென்னை – 9.
கோப்பு நகல்/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்